O.S.No. 35/2018 நாள் 18.08.2026 DW 1 – திரு. ஜான்சேவியர் பிரிட்டோ

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (வாதிதரப்பில்)

எனது மனைவிதான் இந்த வழக்கில் 1 ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். எதிருரை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்தது யார் என்றால் நான்தான். எனது மனைவி அதில் கையெழுத்துமட்டும்தான் செய்தார் என்றால் சரிதான். எனது நிரூபணவாக்குமூலத்தை தயார் செய்வதற்கு வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்தது யார் என்றால் நான்தான். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், என்ன பரிகாரங்கள் கோரப்பட்டுள்ளது என்ற விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிராது, எதிர்வழக்குரை, சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பிராதில் 1 வது தபசில் சொத்தான மீளவிட்டான் கிராம சர்வே எண். 1533 ல் 2.12 ஏக்கர் பொன்னம்மாள் என்பவருக்கு வா.சா.ஆ–30 ன்படி தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 276/1980 ல் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொன்னம்மாள், துரைப்பாண்டிக்கு அந்த சர்வே எண் மற்றும் வேறு சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ– 1 மூலம் 19.10.1981 தேதிய ஆவண எண். 26/1981 ன்படி ஜெனரல் பவர் பத்திரம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ–30 ஆவணங்கள்தான் வாதி மற்றும் பிரதிவாதிகளின் மூல ஆவணங்கள் என்றால் சரிதான். பிராது 1 வது தபசில் சொத்தின் மேற்கடைய 50 செண்டை பொன்னம்மாள் என்பவர் அவரது பவர் ஏஜெண்டான துரைபாண்டி மூலம் வா.சா.ஆ–2 ன்படி 15.06.1982 ஆம்

தேதிய கிரைய ஆவண எண் 1496/1982 ன்படி 50 செண்டை சரோஜா என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சரோஜா காலமான பிறகு அவரது வாரிசுகளிடமிருந்து வா.சா.ஆ–8 ஆவணத்தின்படி மேற்கண்ட சொத்தினை 08.10.2010 தேதிய கிரைய ஆவண எண். 3445/2010 ன்படி 49.087 செண்ட் சொத்தினை வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அது தற்பொழுது டி.எஸ்.நம்பர் 1533/1 ஏ ஆக உட்பிரிவு செய்யப்பட்டு வாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது 1 வது தபசில் சொத்தின் கிழக்கடைய 50 செண்டை பொன்னம்மாள் என்பவர் அவரது பவர் ஏஜெண்டான துரைபாண்டி மூலம் வா.சா.ஆ–3 ன்படி 01.07.1982 ஆம் தேதிய கிரைய ஆவண எண் 1619/1982 ன்படி 50 செண்டை என்.கே.டி.ஆண்டவர் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துதான் பிராது 2 வது தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–3 ஆவணத்தில் மேற்கு மால் "சரோஜா இடத்திற்கு கிழக்கு "என்றுதான் உள்ளது என்றால் சரிதான். தெற்கு மால் "சர்வே எண். 1534 க்கு வடக்கு" என்றுதான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–3 ஆவணத்தில் தெற்கில் சர்வே எண் 1533 ல் பொன்னம்மாளுக்கு கையிருப்பு சொத்து இருப்பதாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிராது 1 வது தபசில் சொத்தில் கிழக்கடைய உள்ள 50 செண்டான பிராது 2 வது தபசில் சொத்தினை என்.கே.டி.ஆண்டவர் வா.சா.ஆ–9 ன் மூலம் 14.12.2006 ஆம் தேதிய கிரைய ஆவண எண். 3556/2006 ன்படி 50 செண்ட் காலிமனையை செல்வரத்தினம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட சொத்து வா.சா.ஆ–9 ன்படி சர்வே எண். 1533/2 ல் உள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும்

வா.சா.ஆ– 9 ஆவணத்தில் மேற்கு மால் "சர்வே எண். 1533/1 சி1, 1533/1 சி2 நிலத்திற்கும் கிழக்கு" என்றும், தெற்கு மால் சர்வே எண். 1534 க்கும் வடக்கு என்பதற்கு பதிலாக "சர்வே எண். 1533/1 சி2 நிலத்திற்கும் வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது 2 வது தபசில் சொத்தை செல்வரத்தினத்திடமிருந்து வா.சா.ஆ– 10 ஆவணத்தின்படி 17.04.2017 தேதிய கிரைய ஆவண எண். 919/2017 ன்படி 50 செண்ட் காலிமனை எனது மனைவியான பிளாரன்ஸ் அவர்கள் கிரையம் பெற்றார் என்றால் சரிதான், ஆனால் அதில் ஒரு கட்டிடம் இருந்தது. அதை சுற்றி வேலி அமைக்கப்பட்டிருந்தது. வா.சா.ஆ–10 ஆவணத்தில் "மேற்படி சொத்தில் கட்டிடம், காம்பவுண்ட் சுவர் எதுவும் இல்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு எனது மனைவி கிரையம் பெற்ற 50 செண்டை தெற்கில் இடம் விடாமல் நேராக பிரித்தால் பிராது 2 ம் தபசிலில் வாதி கணக்கிட்டுள்ள அளவுகளின் அடிப்படையில்தான் பூமியில் இருக்கும் என்றாலும், உட்பிரிவில் கண்டபடி தெற்கில் இடம்விட்டு பூமியில்இருக்க மார்க்கமில்லை என்றாலும் சரியல்ல. எனது மனைவி கிரையம் பெற்றுள்ள சொத்தின் மூல ஆவணம்தான் வா.சா.ஆ–3, 9 என்றாலும், எனது மனைவி கிரையம் பெற்ற ஆவணம்தான் வா.சா.ஆ–10 என்றாலும் சரிதான். மேற்படி 3 ஆவணங்களிலும் நான்கு பக்க அளவுகள் குறித்து குறிப்பிட்டு எதுவும் தபசிலில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் உட்பிரிவின் அடிப்படையில் கிரையம் பெற்றோம். அதற்குரிய வரைபடமும் தாக்கல் செய்துள்ளேன். எந்த அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்குதெரியாது என்றால் சரிதான். எனது மனைவி கிரையம் பெறுவதற்கு முன்பாக அந்த சொத்தினை அளந்து பார்த்து கிரையம் பெற்றதாக சர்வேயர் அறிக்கை மற்றும் வரைபடம் எதுவும் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த பகுதியில் சர்வே கல் கிடையாது என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. எனது மனைவி கிரையம் பெறும்போது பிராது 2வது தபசில் சொத்து காலிமனையாகத்தான் இருந்தது என்றால் ஒரு சிறிய அறை மட்டும்இருந்தது. அந்த அறைக்கு சொத்து வரி கட்டிக்கொண்டிருந்தார்கள். எனது மனைவி கிரையம் வாங்கும்போது வா.சா.ஆ–10 ஆவணத்தில் மேற்கில் சர்வே எண். 1533/1 சி1, 1533/1 சி2 காலிமனையாகத்தான் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வரைபடத்தில் குடோன் கட்டியிருந்தது. வா.சா.ஆ–10 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் சர்வே எண். 1533/1 சி1, 1533/1 சி2 குடோன் கட்டப்பட்டிருந்ததாகவோ, 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற இடத்தில் கட்டிடம் இருந்ததாகவோ காணப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 1533 எத்தனை உட்பிரிவு செய்யப்பட்டது என்றோ, எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்டது என்றோ, அதற்கு வாதிக்கோ, அவரது முற்பாத்தியஸ்தருக்கோ அறிவிப்பு கொடுக்கப்பட்டதா இல்லையா என்ற விவரம் 1ம் பிரதிவாதிக்கோ, எனக்கோ தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ–10 ஆவணத்தின்படி கிரையம் பெற்ற பின்னர் 1ம் பிரதிவாதி அதில் கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ–1, 30, 3,9 ஆன 1ம் பிரதிவாதி சொத்தின் மூல ஆவணங்களை நீதிமன்றத்தில் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ– 10 ன் அசல் ஆவணம் எனது மனைவியான 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மனைவியான 1ம் பிரதிவாதி கிரையம் பெறுவதற்கு முன்பு பெற்ற சட்ட

கருத்துரையை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். சட்டகருத்துரை வழங்கிய வழக்கறிஞர்தான் 1ம் பிரதிவாதிக்கு இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–1 ஆன சட்டகருத்துரை பெறும்போது பரிசீலனை செய்யப்பட்டதாக சொல்லக்கூடிய ஆவணங்கள் எதையும் 1ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–1 ஆவணம் இந்த வழக்கிற்காக பின்யோசனையிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது 1வது தபசில் சொத்தின் மொத்த விஸ்தீரணமான மேற்கடைய 50 செண்டை சரோஜாவும், கிழக்கடைய 50 செண்டை எம்.கே.டி ஆண்டவரும் கிரையம் பெற்ற பிறகு பொன்னம்மாளின் கையிருப்பு மத்தியில் 1.12 ஏக்கர் மட்டுமே இருந்தது என்றால் சரிதான். பிராது 1வது தபசில் சொத்தின் மத்தியபகுதியான 1.12 ஏக்கர் சொத்துதான் பிராது 3வது தபசிலாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1.12 ஏக்கர் விஸ்தீரணம் மட்டுமே உள்ள பிராது 3வது தபசில் சொத்தினை பொன்னம்மாளின் பவர் ஏஜெண்டான துரைபாண்டி பிராது பத்தி 6ல் காண்பிக்கப்பட்டுள்ள அட்டவணையில் கண்டபடி வா.சா.ஆ– 4,5,6,7 மூலமாக கூடுதல் விஸ்தீரணமான 1.50 ஏக்கராக கிரையம் செய்து கொடுத்துள்ளது குறித்து பிராது மற்றும் பிராது ஆவணங்களை பார்வையிட்டு தெரிந்துகொண்டேனா என்றால் அது பற்றி தெரியாது. கூடுதல் விஸ்தீரணத்தை கிரையம் கொடுப்பதற்காக ஆவணங்களில் தவறான மால்களை குறிப்பிட்டு குழப்பம் ஏற்படுத்தியுள்ளனர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–4,5,6, 7 ஆவணங்களை பற்றி தெரியுமா என்றால் யார் யார் எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட இடத்தை வாங்கியுள்ளார்கள் என்று தெரியும். பிராது 3வது தபசில் சொத்தில் ஒரு பகுதியான 4வது தபசில்

சொத்தை வா.சா.ஆ–4 ன்படி பொன்னம்மாளிடம் கிரையம் பெற்ற கோமதியம்மாள் என்பவரின் சொத்து நீதிமன்ற ஏலத்திற்கு வந்ததில் வா.சா.ஆ–11, 29, 24 ன்படி பிராது 4 வது தபசில் சொத்தினை வாதி நீதிமன்ற ஏலத்தில் எடுத்துள்ளார் என்றால் சரிதான். அது பற்றி நேரடியாக தெரியாது, இந்த பிரச்சனைக்கு பின்பு கேள்விப்பட்டேன். மொத்த விஸ்தீரணமான செண்ட் 50 ல் கோமதியம்மாளின் வாரிசான தனலெட்சுமியின் 1/6 பாகத்தை தவிர்த்து இதர வாரிசுகளின் 5/6 பாகத்தை வாதி நீதிமன்றத்தின் மூலம் ஏலம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தற்போதுதான் தெரியும். தனலெட்சுமி இந்த வழக்கில் 7 ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஆண்டவர், பொன்னம்மாள், துரைபாண்டி, எனக்கு சொத்தை விற்ற செல்வரத்தினம் ஆகியோர்கள் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. மேற்படியோர்கள் வழக்கில் அவசிய தரப்பினர்கள் கிடையாது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் தற்போது யார் அனுபவத்தில் உள்ளார்களோ அவர்களை மட்டுமே சேர்த்தால் போதுமானது என்றால் சரியல்ல. பிராது 4 வது தபசில் சொத்தை வாதி கிரையம் பெற்றுள்ள நிலையில் அவரது முற்பாத்தியஸ்தரான பொன்னம்மாள்அவரது அதிகார முகவர் துரைபாண்டி, கோமதியம்மாளின் இதர வாரிசுகள் ஆகியோர்களுக்கு பிராது தபசில் சொத்துக்களில் எவ்வித கையிருப்பும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் மேற்படியோர்களை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. வாதி நீதிமன்ற ஏலத்தின் மூலம் பிராது 2 வது தபசில் சொத்தின் ஒரு பகுதியான 4 வது தபசில் சொத்தினை பாகபிரிவினை செய்து தரகோரித்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் என்னுடைய இடத்தில் அவர் பாகபிரிவினை

கோருவது சரியல்ல. 3 வது தபசில் சொத்தான 1.12 ஏக்கர் சொத்திற்கும், 2 வது தபசில் சொத்தான எனது மனைவியான சொத்திற்கும் இடையேயுள்ள ஊடுபொழியை நிர்ணயம் செய்வதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது என்றால் ஏற்கனவே பொழி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஊடுபொழி ஆவணங்களின் அடிப்படையில் செய்யவில்லை என்றாலும், உட்பிரிவின் அடிப்படையில்தான் செய்யப்பட்டுள்ளது என்றால் 1ம் பிரதிவாதியான எனது மனைவி ஆவணங்களின் அடிப்படையில்தான் உட்பிரிவு செய்துள்ளார். நான் மேற்சொன்னவாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. எனது மனைவி பிராது 2 வது தபசில் சொத்தில் எந்த வருடம் கட்டுமானம் கட்டினார் என்றால் 2017 ல் கிரையம் பெற்று 1 மாதத்தில் கட்டிடம் கட்ட தொடங்கி 2018 ல் முடிக்கப்பட்டுவிட்டது. கட்டிட அனுமதிக்கான வரைபடம், வரைபட அனுமதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் பஞ்சாயத்து எல்கைக்குள் இருந்தது. பழைய கட்டிடம் இருந்த இடத்தில் நான் கோட்டை சுவர் போட்டு கட்டிடம் கட்டி விட்டேன். அனுமதியை தாக்கல் செய்யலாம். 2018 ல் நான் கட்டிடம் கட்டி முடித்த உடன் இந்த வழக்க தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றால் நான் கட்டிடம் கட்டி முடித்தபிறகு 3 மாதத்திற்கு பின்பு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் போடப்பட்ட தீர்வை ரசீதுகள் பி.வா.சா.ஆ–5,6 என்றால் சரிதான். எனது மனைவி கிரையம் பெற்ற 50 செண்டிற்குதான் பி.வா.சா.ஆ–2 கணினி பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான், அதற்கு முன்னர் நான் கிரையம் வாங்கிய செல்வரத்தினம் பட்டா வைத்திருந்தார். பி.வா.சா.ஆ–2 ன் அசல் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. நான் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நகலை தாக்கல்

செய்துள்ளேன். செல்வரத்தினத்தின் பட்டா எண். 6210 என்று பி.வ.சா.ஆ–1 சட்டகருத்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், பி.வா.சா.ஆ–2 ல் பட்டா எண். 5174 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் செல்வரத்தினத்தின் பட்டா எண். 5174 தான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஆணையர் நியமனம் செய்யப்பட்டு சர்வேயர் உதவியுடன் பிராது தபசில் சொத்துக்களை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அது தவறாக தாக்கல் செய்துள்ளார். அறிக்கையும், வரைபடமும் ஸ்தல நிலவரத்தை உள்ளபடி காட்டக்கூடிய நிலையில் உள்ளது என்றாலும் அது தவறாக உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் எண்.2 ல் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக சொல்லக்கூடிய 2 வது தபசில் 50 செண்ட் சொத்து தற்பொழுது ஸ்தலத்தில் 52.67 செண்டாக மேற்கில் கூடுதலாக வரைபடத்தில் A1Y1Y2A2 என்று சிவப்பு வண்ணமிட்டு காண்பித்துள்ளார் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட 50 செண்ட் இடத்தில்தான் நான் கட்டிடம் கட்டியுள்ளேன். A1Y1Y2A2 என்ற பகுதி எனக்கு பாத்தியப்பட்ட இடத்திற்குள் வருவதாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. A2Y2 பகுதியில் 1ம் பிரதிவாதியின் காம்பவுண்ட் சுவர் உள்ளதாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை 10 ல் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றிதெரியாது. 50 செண்டை மட்டுமே கிரையம் பெற்றுள்ள 1ம் பிரதிவாதி அதை தாண்டி மேற்கே 2.67 செண்டை ஆக்கிரமித்துள்ளார் என்றால் மேற்கில் நான் காம்பவுண்ட் சுவர் கட்டவேயில்லை, அங்கே குடோன் உள்ளதால் கட்டவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நான் மேற்சொன்னவாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரும், சர்வேயரும் ஓ

பாயின்டை நிர்ணயம் செய்யவில்லை என்று ஆட்சேபணைதெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அனுமதிபெற்று DGPS கருவியை வைத்து துல்லியமாக அளவீடு செய்தார்கள் என்றால் சரியல்ல. வாதியால் எனக்கு எந்தவிதமான மனஉளைச்சலும் ஏற்படவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதிதான் வாதிக்கு பாத்தியப்பட்ட 2வது தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய 50 செண்டை சொத்தை மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளார் என்றாலும், 52.67 செண்ட் பாத்தியதை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் கட்டிடம் கட்டி முடித்த காலவரையறைக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றால் கட்டிடம் கட்டி 2 மாதத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 2வது தபசிலில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள 2.67 செண்ட் இடத்தை நான் அப்புறப்படுத்திக்கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றாலும், 1வது பிரதிவாதி செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படக்கூடியது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

BREETHA M

Digitally signed by BREETHA M